# முடிவுரை

# முடிவுரை

ஒவ்வொரு பண்பாட்டு வாழ்வியலுக்கும் ஓர் அடிப்படை உண்டு. நம்முடைய பண்பாட்டுச் செழுமையையும், இறை நம்பிக்கையையும், விளக்கிக் காட்டுவன திருக்கோயில்களாகும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதனை நினைவில் கொண்ட தமிழக மக்கள் தங்கள் கலை உணர்ச்சியையும், அழகுணர்ச்சியையும் கோயில்கள் வழியே கண்டனர்.

ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கூறுகின்ற அருமையான கல்வெட்டுகளையும் கவின் கலையையும் ஒருங்கே கொண்ட பழந்தமிழ்க் கோயில்களுக்கு தமிழகத்தில் பஞ்சமேயில்லை. மழை, கடல்கோள், காற்று, கடும்புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் இருந்த இடம் தெரியாமல் மறைந்த போன கோயில்களும் எண்ணற்றவை. வேற்று மதத்தினரின் வருகையாலும், சீற்றத்தாலும் சிதைந்து போன திருக்கோயில்களும் ஏராளம்.

தொன்று தொட்டு மரம், செங்கல், சுடுமண் மற்றும் சுதைக் கோயில்கள் போற்றுவார் இன்றிக் காலப்போக்கில் மண்ணில் புதைந்து போயின.

இத்தகைய இடர்ப்பாடுகளையெல்லாம் தாண்டி எஞ்சியும், மிஞ்சியும் உள்ள கோயில்கள் ஏராளம். குமரி முதல் வேங்கடம் வரையுள்ள பகுதியில் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட கோயில்கள் இருந்துள்ளன, தமிழக அரசின் அறநிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்கள் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டவை. அரசாங்கத்தின் மேற்பார்வைக்கு வராத கோயில்கள் பத்தாயிரத்திற்கும் மேல் உள்ளன.

இக்கோயில்கள் முழுமையும் தமிழர்கள் ஒரே நாளில் கட்டி முடித்து விடவில்லை. தொன்மைக்காலம் தொடங்கித் தான் கற்று வந்த அழகுக்

கலையாம் கட்டடக் கலையை காலத்திற்கேற்ப மாற்றி மாற்றி அமைத்தனர் தமிழர்கள். தலவிருட்சங்களின் அடியில் கல்லால் ஆன வடிவம் தொடங்கி, மேல்கூரை அமைய நாளடைவில் கருங்கற்களை அடுக்கிக் கருவறைகளை உருவாக்கி, கருவறைத் தெய்வத்திற்குத் துவார பாலகர்கள் அமைந்த நிலையில் கருவறைச் சுற்றுப்பகுதியில் கோட்டத் தெய்வங்களாக விநாயகர், முருகன், தட்சணா மூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை வடிவங்கள் அமைத்தனர்.

சிலை வழிபாட்டின் வளர்ச்சியால் நாளடைவில் மக்களிடம் ஏற்பட்ட நம்பிக்கையானது நவக்கிரகங்கள், கோசாலை, மடப்பள்ளி என மாறுபட்ட வடிவங்களைத் தாங்கியது. பின்னர், கருவறை மேல் பகுதியில் நிலைகள் பல உருவாயின. கருவறை முகப்பில் தூண்களோடு கூடிய நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபங்கள், குளங்கள், தீர்த்தங்கள் என ஏற்பட்டன. மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த கோயில்களோடு கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, தல வரலாறுகள் போன்றவை படைக்கப்பட்டன.

மழை இல்லாத காலங்களில் மன்னர்கள் மக்களை ஒரு முகப்படுத்தவும், அழகுக்கலைகளை வளர்க்கவும், எதிரிகளிடமிருந்து மக்களைக் காக்கவும் உயரமான மதிற்சுவர்களோடு கோயில்களைக் கட்டு வித்தனர், அத்துடன் கோயில் வழிபாடு, விழாக்களுக்கு வருவாயையும் ஏற்படுத்தித் தந்தனர்.

அடியார்கள் தங்கள் மதக்கருத்துகளை வெளிப்படுத்திட அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தி மக்களிடையே பக்திப் பயிர் செழித்திட வழிவகை செய்தனர். சைவ சமய அடியார்களும், வைணவ ஆழ்வார்களும் தாங்கள் வழிபடும் இறைவன் மீது போற்றிப் பாடல்களைப் பாடினர். அவ்வகையில் சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களின் ஆட்சியளவில் பல கோயில்கள் பல்நிலை அடுக்குகளோடு உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பல்லவர்கள் கால அளவில் சைவமும், வைணவமும் மீண்டும் தமிழகத்தில் எழுச்சி பெற்ற நிலையில் மேலும் பல கோயில்கள் கட்டப்பட்டன, கோச் செங்கணான் என்ற மன்னர் காவிரிக்கரையோரத்தே எழுபது மாடக் கோயில்கள் கட்டியமை மன்னர்கள் இறைவனுக்குச் செய்த தொண்டுகளுக்குச் சான்றாகும்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சென்னை நகரக் கோயில்கள் என்ற இந்த ஆய்வில் சென்னை அமைப்பும், தேவார த்திருமுறைகளால் பாடப்பட்ட தலங்களும், வைப்புத் தலங்களும், நவக்கிரகக் கோயில்களும், அடியார்கள் வாழ்ந்த திருக்கோயில்களும் தொண்டை மண்டலத்தில் குறிப்பாக சென்னை நகரில் காணப்படுபவை, அவற்றின் சிறப்புகள் யாவும் ஒவ்வோர் இயல் வழியே விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இயல் ஒன்றாக அமைவது சென்னை அமைப்பும் சிவன் கோயில்களும் என்னும் இயலாகும். தற்போது சென்னை, தமிழ்நாட்டின் தலைநகராய் அமைந்துள்ளது, முந்தைய கால அளவில் தொண்டை நாடாக அமைந்த பெரும் பகுதி சென்னையும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுமாகும். **1639** ஆம் ஆண்டளவில் சென்னை மாநகரம் உருவானது. தமிழகத் தலைநகராய் விளங்கும் சென்னை இந்தியப் பெருநகரங்களுள் ஒன்று.

பல்வேறு மாநிலத்தவர், பல்வேறு சமயத்தினர் சங்கமிக்கும் இடமாக அமைந்து ஆன்மீக அளவில் சைவ, வைணவக்கோயில்கள் குறிப்பாக சைவசமய அடியார்களின் தேவாரம், திருப்புகழ் போன்றவற்றால் பாடப்பெற்ற கோயில்களைக் கொண்ட நகரம் சென்னையாகும். தொழிற்பூங்காக்கள், சாலைகள், நூலகங்கள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், தமிழகத் தலைமைச் செயலகம், சட்டசபை, கணினித் தொழிற்கூடங்கள் அமைந்து நாகரிக வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் முன்னணியில் அமைந்துள்ள சிறப்புகளையும் பெற்றுள்ளது.

மயிலாப்பூர், திருவான்மியூர், திருவேற்காடு, திருவலிதாயம், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில் ஆகியன தேவாரத் திருமுறைகளால் பாடல் பெற்ற சைவத்திருக்கோயில்களாகும். தேவாரப் பதிகங்கள் வழியே வைப்புத்தலங்களையும் கொண்ட சிறப்புகளைப் பெற்றுள்ள நகரம் இந்தச் சென்னை ஆகும். உலகின் நாகரிக மேம்பாட்டிற்கு ஏற்ப இந்தச் சென்னை நகரமும் நாகரிக மேம்பாட்டினைப் பெற்று வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

சென்னை நகரம், சென்னை மாநகரம், சென்னைப் பெருநகர மாநகரம் எனப் பல படிநிலை வளர்ச்சியைப் பெற்று நீண்ட நிலப்பரப்பினையும் நீண்ட கடற்கரையையும் கொண்ட நகரமாக இந்தச் சென்னை நகரம் விளங்குகிறது. பண்டைத் தமிழரின் கட்டடக் கலையுடன் சோழ, பல்லவர் கட்டடக் கலையும் இணைந்து உருவாக்கப்பட்ட பல கோவில்களைக் கொண்டு விளங்கும் நகரம் இந்தச் சென்னை மாநகரம்.

பிற்காலத்தில் விஜய நகர மன்னர்களின் ஆளுகைக்கும் உட்பட்ட இந்த நகரத்தில் அவர்களின் கட்டடக் கலையும் ஆங்காங்கே மிளிர்வதைக் காணமுடிகிறது. ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு எழுந்த கூம்பு வடிவக் கட்டடங்களும் ஊசிக் கோபுரங்களைக் கொண்ட தேவாலயங்களும் நிறைந்து சென்னை நகரத்தை ஐரோப்பிய நகருக்கு இணையாகக் காட்சியளிக்க வைப்பதைக் காணமுடிகிறது.

ஐரோப்பியர் சிலை, அறிஞர்கள் சிலை, அரசியல் வாதிகளின் சிலை, தலைவர்களின் சிலை எனப் பல்வேறு சிலைகளைக் கொண்ட சிலைகளின் நகரமாகவும் இந்தச் சென்னை நகரம் விளங்குகிறது.

இரண்டவது இயல் சென்னையில் உள்ள தேவாரத் திருமுறைக் கோயில்கள் என்னும் இயலாகும்.

பல்லவர்கால அளவில் திருவொற்றியூர் சிறப்புடைய திருக்கோயிலாக விளங்கியதோடு கல்வெட்டுகளும், இலக்கியச்

சான்றுகளையும் கொண்டு சுந்தரர் சங்கிலியாரோடு தொடர்புடைய செய்திகளைக் கொண்டு விளங்குகிறது.

திருவான்மியூர் அருணகிரியின் திருப்புகழால் சிறப்புற்ற திருக்கோயிலாகத் திகழ்வதோடு 108 சிவலிங்கங்களை ஒருங்கே கொண்டு விளங்குகிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற திருத்தலமாக இந்த மருந்தீசுவரர் திருக்கோவில் அமைந்துள்ளது.

திருவலிதாயம் வரலாற்றோடு தொடர்புடையதாகும் திருவல்லீசுவரர் திருவலிதாயத்தில் சைவமரபோடு கூடிய கோயிலில் குடிகொண்டுள்ளமை விளக்கம் பெறுகிறது. இந்தத் திருவலிதாயம் தற்காலத்தில் பாடி என அழைக்கப்படுகிறது.

திருமுல்லைவாயிலில் (வட) மாசிலாமணீஸ்வரர், விஜய நகரப் பேரரசு கட்டிய திருக்கோயிலில் வீற்றிருப்பது சிறப்பாகும். அருணகிரிநாதர் மூன்று பதிகங்களைப் பாடிய சிறப்பும், சுந்தரர் பாடிய பதிகமும் கொண்டு விளங்கும் திருத்தலமாகவும் இந்தத் திருத்தலம் விளங்குகிறது.

தொண்டைநாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் மூன்றாவதாகச் சிறப்புடைய திருக்கோயிலாகத் திருவேற்காடு அமைகிறது. மூர்க்க நாயனார் அவதரித்த தலம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. திருஞானசம்பத்தரின் தேவாரப் பாடல்களும் அருணகிரியின் திருப்புகழும் பெற்ற வெள்ளீசுவரரும். வேற்காட்டு அம்மனும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் திருக்கோயிலாகவும் விளங்குவதைக் காணமுடிகிறது.

மூன்றாவது இயலாக அமைந்துள்ளது சென்னையிலுள்ள தேவாரத் திருமுறை வைப்புத் தலங்களாகும். தொண்டை நாட்டளவில் 'திருப்பதிகங்களில் முழுமையாகப் பாடப்பெறாமலும், திருப்பதிகங்களுள் பெயர்கள் மட்டும் குறிக்கப்படும் வைப்புத்தலங்களாக விளங்குபவை பதின்மூன்று தலங்கள். அத்தலங்களின் சிறப்புகளோடு சென்னையில் அமைந்துள்ள திருவேட்டீஸ்வரன் (திருவல்லிக்கேணி), நந்திவரம்

(கூடுவாஞ்சேரி) எழும்பூரில் உள்ள அர்த்தநாரீசுவரர் திருக்கோயில்களின் அமைப்பும், சிறப்பும் விளக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள நவக்கிரகக் கோயில்கள் என்னும் நான்காம் இயலில் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் தனிச் சந்நிதியில் இடம் பெற்று, தன்னை நாடி வருபவர்களுக்கு நல்ல பயன்களையே வழங்குவதும் விரித்துரைக்கப் படுகின்றது. தமிழகம் முழுவதுமாக நவக்கிரகக் கோவில்கள் அமைந்திருப்பதைப் போல் சென்னையில் மட்டுமே நவக்கிரகக் கோவில்கள் அமைந்துள்ளன.

கொளப்பாக்கத்தில் சூரியனுக்கு அமைந்துள்ள அகத்தீசுவரர் திருக்கோவிலும் சோமங்கலத்தில் சந்திரனுக்கு அமைந்துள்ள சோமநாதீசுவரர் திருக்கோவிலும் பூவிருந்தவல்லியில் அங்காரகனுக்கு அமைந்துள்ள பூவைத்தீசுவரர் ஆலயமும் கோவூரில் புதனுக்கு அமைந்துள்ள சௌந்தரேசுவரர் ஆலயமும் போரூரில் குருவுக்கு அமைந்துள்ள ராமநாதேசுவரர் திருக்கோவிலும் மாங்காட்டில் சுக்கிரனுக்கு அமைந்துள்ள வெள்ளீசுவரர் திருக்கோவிலும் பொழிச்சலூரில் சனிக்கு அமைந்துள்ள அகத்தீசுவரர் திருக்கோவிலும் குன்றத்தூரில் ராகுவுக்கு அமைந்துள்ள நாகேஸ்வரர் திருக்கோவிலும் கெருகம்பாக்கத்தில் கேதுவுக்கு அமைந்துள்ள நீலகண்டேசுவரர் திருக்கோவிலும் சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ள நவக்கிரகத் தலங்கள் ஆகும்.

கள ஆய்வில் கண்ட வழியில் இத்திருக்கோயில்களை ஆன்மீகச் சிந்தனை கொண்டவர்கள் சென்று தரிசனம் செய்து இறைக் கொள்கையில் தன்னை ஈடுபடுத்திட முடியும்.

சென்னையில் அடியார்கள் திருக்கோயில்கள் வேளச்சேரி, திருவான்மியூர், மயிலாப்பூர், கிண்டி, திருவொற்றியூர், வியாசர்பாடி, மேடவாக்கம், பெரம்பூர் முதலான இடங்களில் அமைந்துள்ளன. இந்த

அடியார்கள் திருக்கோவில்களில் நாள்தோறும் வழிபாடு நடைபெறுவதையும் காணமுடிகிறது. அடியார்கள் திருக்கோவில்கள் பெரும்பாலும் சிவலிங்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ள. வான்மீகர், உரோம முனிவர், பட்டினத்தார், இராமலிங்க சுவாமிகள், பாடகச்சேரி சுவாமிகள், அந்துசாமி, சச்சிதானந்த சுவாமிகள், யாகவா முனிவர் முதலான இறையடியார்களின் திருக்கோவில்களுக்கு நேரில் சென்று இவ்விறையடியார்களின் திருக்கோவில் அமைப்புக் குறித்தும் வரலாறு குறித்தும் ஆய்வு செய்யபறப்பட்டுள்ளது. சென்னை தாம்பரத்திற்கு அருகே உள்ள மகாலட்சுமி நகரில் பதினெண் சித்தர்களுக்கு எனத் தனிச் சந்நிதிகளுடன் கூடிய ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ள திருக்கோவில்கள் தவிரவும் சென்னையில் பல கோவில்கள் அமைந்துள்ளன. அந்தத் திருக்கோவில்களை இணைத்துப் பரந்துபட்ட ஆய்வாக மேலும் ஆய்வு நிகழ்த்த இயலும். சென்னையில் உள்ள சைவக் கோவில்கள், வைணவக் கோவில்கள், கிறித்தவத் தேவாலயங்கள், இசுலாமியப் பள்ளிகள் எனச் சமயங்களை அடிப்படையாகக் கொண்டும் ஆய்வுகள் மேற்கொள்ளலாம். சென்னையில் உள்ள சமணத் திருக்கோவில்கள் எனவும் ஆய்வு செய்ய இயலும். இவை தவிர ஒவ்வொரு திருக்கோயில் குறித்தும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள இயலும்.